අල්ලස් හෝ දූෂණ චෝදනා විමර්ශන කොමිෂන් සභාව

இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு

**COMMISSION TO INVESTIGATE ALLEGATIONS OF BRIBERY OR CORRUPTION**

තැ.පෙ. 1431, 36, මලලසේකර මාවත, කොළඹ 07. த.பெ. 1431, 36, மலலசேகர மாவத்தை, கொழும்பு 07. P.O. Box 1431, 36, Malalasekara Mawatha, Colombo 07.

දුරකථන අංක/தொலைபேசி/Telephone: +94 112596365, +94 112596360 ක්ෂණික ඇමතුම් අංකය/Hotline: 1954 ෆැක්ස්/மின்னஞ்சல்/Fax: +94 112595045

වෙබ් අඩවිය/இணையத்தளம்/website: www.ciaboc.gov.lk විද්‍යුත් තැපෑල/மின்னஞ்சல்/E-mail : ciaboc_gen@ciaboc.gov.lk


எனது இல: DG/CA/AD/144

2026.04.20

அனைத்து நியமிக்கப்பட்ட அதிகார அமைப்புக்களுக்குச் சொந்தமான நிறுவனங்களின் தலைவர்களுக்கு,

**மத்தியமயப்படுத்தப்பட்ட இலத்திரனியல் அமைப்பு தொடர்பாக நியமிக்கப்பட்ட அதிகார அமைப்புக்கள் (Designated Authority) தொடர்பாக.**

மத்தியமயப்படுத்தப்பட்ட இலத்திரனியல் அமைப்பு தொடர்பான இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவினால் 2026.04.08 ஆம் திகதி வெளியிடப்பட்ட சுற்றுநிருப இலக்கம் 01/2026 இற்கு அமைவாக,

02. மேற்படி சுற்று நிருபத்தின் அடிப்படையில் வழங்கப்படும் தகவல் திரையை (Dashboard ஐ) கையாள்வதற்காக, நியமிக்கப்பட்ட அதிகார அமைப்பின் தலைவரால் ஒரு அங்கீகாரமளிக்கப்பட்ட அதிகாரி நியமிக்கப்படல் வேண்டும். நியமிக்கப்பட்ட அதிகார அமைப்புக்களின் பெயர்ப் பட்டியல் மேற்படி சுற்று நிருபத்தில் வழங்கப்பட்டுள்ளது.

03. நியமிக்கப்பட்ட அதிகார அமைப்புக்களின் தலைவர்கள், நியமிக்கப்பட்ட அதிகார அமைப்புகளின் தகவல் திரைக்காக (Dashboard ) ஒரு உத்தியோகபூர்வ மின்னஞ்சல் முகவரியை (official e-mail address) வழங்குதல் வேண்டும்.

04. இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு, நீங்கள் வழங்கும் உத்தியோகபூர்வ மின்னஞ்சல் முகவரிக்கான ஒரு பயனாளர் பெயர் (Username) மற்றும் கடவுச்சொல்லை (password ஐ) வழங்கும்.

05. நியமிக்கப்பட்ட அதிகார அமைப்பின் தலைவர் மற்றும் தகவல் திரையை (Dashboard ஐ) பயன்படுத்த நியமிக்கப்பட்ட அங்கீகாரமளிக்கப்பட்ட அலுவலர் ஆகியோரின் தகவல்கள் படிவம் 1-இன் படி அறிவிக்கப்படல் வேண்டும். மேலும், தகவல் திரையில் (Dashboardல்)

அங்கீகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தரால் மேற்கொள்ளப்படும் செயல்பாடுகளுக்கு, அந்த அங்கீகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தரும் சம்பந்தப்பட்ட அதிகார அமைப்பின் தலைவரும் நேரடியாகப் பொறுப்பாவார்கள் என்பதை இதன்மூலம் நான் அறிவிக்கின்றேன்.

“இந்தப் படிவம் தொடர்பான தகவல்களில் எந்நேரத்திலும் மாற்றம் ஏற்பட்டால், இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் வெளிப்படுத்தல் பிரிவுக்கு தாமதமின்றி எழுத்துப்பூர்வமாகத் அறிவிக்கப்படல் வேண்டும்’’

06. மாதிரிப் படிவம் 1 தொடர்பான தகவல்களை, அங்கீகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் அல்லது பிற பொறுப்பான அதிகாரி **ஆங்கிலத்தில்** பூர்த்தி செய்து, அலுவலக நாட்களில் காலை 8.30 மணிக்கும் மாலை 4.00 மணிக்கும் இடையில், இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் வெளிப்படுத்தல் பிரிவு, இல 36, மலலசேகர மாவத்தை, கொழும்பு 7 என்ற முகவரிக்கு நேரில் வருகை தந்து வழங்குதல் வேண்டும்.

07. அதே நாளில், இல 4-இல் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்களும், நியமிக்கப்பட்ட அதிகாரியாக உங்கள் அதிகார வரம்பிற்குள் வரும் நிறுவனங்களின் பட்டியலும், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் வெளிப்படுத்தல் பிரிவின் அங்கீகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர்களால் நேரடியாக வழங்கப்படும்.

08. இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் வெளிப்படுத்தல் பிரிவுக்கு, **வருகை தருவதற்கு முன்பு, 0767011954** என்ற இலக்கத்திற்கு அழைப்பினை மேற்கொள்வதன் மூலம் குறித்த தினம் மற்றும் நேரத்தை முற்கூட்டியே ஒதுக்கிக் கொள்வதன் மூலம், உங்களுக்கு எதிர்பாரா விதமாக ஏற்படும் காலதாமத சிரமங்களை தவிர்த்துக் கொள்ளலாம் என்பதையும் உங்களது மேலான கவனத்திற்கு கொண்டு வருகின்றேன்.

09. இப்பணிக்காக நியமிக்கப்பட்ட அங்கீகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தரின் வருகையை எதிர்பார்க்கின்றேன்.

ஆணைக்குழுவின் கட்டளைப்படி,

**ஆர் . எஸ். ஏ. திசாநாயக்க**

பணிப்பாளர் நாயகம்,

**சொத்துக்கள் பொறுப்புக்கள் வெளிப்படுத்தல் பிரிவு**

தொலைபேசி இல : 0112596359
0767011954

மின்னஞ்சல் : assetsciaboc@gmail.com
தொலைநகல்: 0112587287

## மாதிரிப் படிவம் 1

| No. | Description | Information |
|---|---|---|
| 01 | Name of the designated authority and Dash Board Number | |
| | | |
| 02 | Name of the head of the designated authority | |
| | Personal Telephone Number | |
| | Official Telephone Number | |
| 03 | Name of the Designated Officer | |
| | Personal Telephone Number | |
| | Official Telephone Number | |
| 04 | Official Email - Address for the dash board | |
| 05 | Address of the designated authority | |